மில்க்வைற் பாவனையாளர்களுக்கு
ஓர் அன்பான வேண்டுகோள்!
மில்க்வைற் நீலசோப்
போன்ற அமைப்பில் வேறு போலித்
தயாரிப்புக்கள் மார்க்கட்டில்
உலாவுவதால் மில்க்வைற்
தயாரிப்புக்களின் மேலுறைகளில்
வி. எம். கே. என்ற அடையா
ளத்தைக் கவனித்து வாங்குங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 25 ஷவ்வா 8 இதழ் 176
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 9-8-1981




எதிர்க்கட்சிகளை அழிப்பதுதான் நோக்கமா?

# ஜனாதிபதி, பிரதமரைப் பொறுத்த விடயம் இது!

## அரச எம். பி. க்களின் செயல்பற்றி 'அமிர்' கருத்து

[கொழும்பு]

முழு பாராளுமன்றமும் நீதிமன்றமாக அமர்ந்து எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மீது கொண்டுவரப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை நடத்தவேண்டுமெனக்கோரி அரசதரப்பு உறுப்பினர்கள் சிலர் கொண்டுவரவிருக்கும் பிரேரணைதொடர்பாக திரு. அமிர்தலிங்கத்திடம் கேட்டபோது அவர்கள் எதையும் செய்யலாம். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை என்ருர்.

அவர் மேலும் கூறியதாவது: இப்படி முழுசபையுமே நீதிமன்றமாகக் கூடி விசாரணை நடத்துவது இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரமே நிகழமுடியும் என்று நான் கருதுகிறேன். ஒன்று, ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழுவினால் குற்றவாளியாகக் காணப்படும் உறுப்பினர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி முடிவெடுப்பதற்காக; மற்றது சபையின் சிறப்புரிமைகளை ஒருவர் மீறி செயல்படும்போது இவ்வாறு கூடலாம்.

ஜனநாயகம் என்பது அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் பொதுவான ஒரு விடயம். அரசாங்கம் தனது மிகப்பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு எதிர்க்கட்சிகளின் உரிமைகளைப்பறிக்காமல் பார்த்துக்கொள்ளுவது அரசின் பொறுப்பு இவர்களின் முயற்சியைப் பார்த்தால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவர்மீதும் இவ்வாறான பிரேரணைகளைக் கொண்டுவர முடியும். எதிர்க்கட்சிகளை அழிப்பதுதான் அரசின் நோக்கமானல் அது ஜனாதிபதியையும் பிரதம மந்திரியையும் பொறுத்தவிடயம்" என்றும் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். [ம]

## "பிரிவினைத் தடைச் சட்டம் வந்தால் ம.வி.மு.எதிர்க்கும்"

### வடபிரதேச அமைப்பாளர் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

பிரிவினைகோரும் கட்சிகள் மீது அரசு, தடைச்சட்டம் கொண்டுவந்தால் மக்கள் விடுதலை முன்னணி அதைப் பலமாக எதிர்க்கும்.

மக்கள் விடுதலை முன்னணி வடபிரதேச அமைப்பாளர் திரு பா. கணேசபிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

பிரிவினை கோரும் கட்சிகள் மீது நடவடிக்கை எடுக்கும் முகமாக இந்தியாவைப்போல இலங்கையிலும் பிரிவினைக்கு எதிராக தடைச்சட்டம்

[6-ம் பக்கம் பார்க்க]

## விஜயவீரா இன்று யாழ். வருகிருர்

[யாழ்ப்பாணம்]

மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் திரு. ரோகண விஜயவீரா இன்று மாலை சுன்னுகம்

[6ம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில் பூரண அமைதி

[மட்டக்களப்பு நிருபர் உதயகுமார்]

மட்டக்களப்புப் பகுதியில் பூரண அமைதி நிலவுகின்றது. அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நேற்று நடக்கவில்லை. ராணுவத்தினரும் பொலிஸாரும் நகர வீதிகளில் ரோந்து புரிகின்றனர்.

மக்கள் வழமைபோல் நடமாடத் தொடங்கியுள்ளனர். ஆனல் இரவு நேரங்களில் மக்கள் நடமாட்டம் குறைவாகவே காணப்படுகின்றது. படமாளிகைகளில் இரவுக் காட்சிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன

திருகோணமலை எம்.பி திரு. இரா. சம்பந்தன், நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் ஆகியோர் நேற்று வன்செயல்களால்

[6-ம் பக்கம் பார்க்க]

'ஹெலிகொப்டர்' கண்காணிக்க

## தேடப்பட்ட இளைஞரை சுன்னுகத்தில் மடக்கிப் பிடித்தனர்

[யாழ்ப்பாணம]

வடபகுதி வன்செயல், கொள்ளைச் சம்பவங்கள தொடர்பாக தேடப்பட்ட இளைஞர் ஒருவர் ஹெலிகொப்டர் கண்காணிக்க, பாதுகாப்பு படையினர் சுற்றி வளைக்க சுன்னுகத்தில் வைத்து நேற்று முன்தினம் துப்பாக்கியால் சுட்டு மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

சுன்னுகம் பகுதியிலுள்ள மயிலணி என்ற இடத்தில் உள்ள ஒருவீட்டில் இந்த இளைஞர் தங்கியிருக்கிருர் என்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து பாதுகாப்பு படை தேடுதலில் ஈடுபட்டது.

இவ்வீட்டின் சொந்தக்காரரான சரவண முருகையா என்பவர் கொள்ளைச் சம்பவங்கள் சம்பந்தமாக சில மாதங்களுக்கு முன்பு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகிருர்.

இவ்வீட்டில் இவரது மனைவி ஜெயமலரும் 3 பிள்ளைகளுமே இருந்து வருகிருர்கள்.

இவ்வீட்டிலேயே சந்தேக நபர் நடமாடுவதாக நேற்று முன்தினம், ஆயுதப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில், வீட்டின் மேலே 'ஹெலிகொப்டர்' வட்டமிட ஆயுதப்படையினர் தேடுதல் நடாத்தினர்கள் எனத் தெரிய வருகிறது.

சந்தேக நபர் அச்சமயம் தப்பியோடிக் கொண்டிருக்கையில் இவரைத் தொடர்ந்து 'ஹெலிகொப்டர்' தாழப் பறந்து கொண்டிருந்ததால் இதன் வழியில் ஆயுதப்படையினர், சுன்னுகம் ரயில் நிலைய வீதியில் வைத்து. துப்பாக்கிப் பிரயோசம் செய்து அவரை மடக்கிப்பிடித்தாகத் தெரிகிறது.

இவரைக் கைது செய்ததின் மூலம், வடபகுதியில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்கள் பற்றிய பல புதிய தகவல்

[6-ம் பக்கம் பார்க்க]

அம்பாறை - கல்முனை வன்செயல்கள் -

## அகதிகளுக்கு உணவு உடை உதவ வேண்டுகோள்

(கொழும்பு)

அம்பாறை - கல்முனைப் பகுதிகளில் வன்செயல்களால் பாதிப்புற்று அகதிமுகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்காக உடுபுடவைகளையும் பால்மா போன்றவற்றையும் கொடுத்துதவும்படி இலங்கை தமிழ் மகளிர்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இச் சங்கத்தின் செயலாளர் திருமதி இ. யோகராஜா விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில் அம்பாறை- கல்முனைப்பகுதிகளில் வன்முறையால் பாதிப்புற்ற சுமார் 1000 மக்கள் மட்டக்களப்பு மெதடிஸ்த தேவாலயத்திலும், அக்கரைப்பற்று பிள்ளையார்கோவிலிலும் மண்டூர் கந்தசுவாமி கோவிலிலும், கல்முனை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் தங்கியிருக்கிருர்கள். இவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்கு பால்மா, உணவு, உடுபுடவைகள் தேவைப்படுகின்றன. இவைகளைக் கொடுத்துதவக் கூடியவர்கள் கொழும்பு 7ல புல்லர்ஸ் வீதியிலுள்ள எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும் என்று தெரிவித்துள்ளார்.

சோனப்பு கொலை முயற்சி வழக்கு

## மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டது!

[புலோலி]

சோனப்பு கொலை முயற்சி வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பாக்கியராசா என்பவர் கரவெட்டி மேற்கு சோனப்புவில் உள்ள பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம் என்பவரை கத்தியால் குத்திக் கொலை செய்ய முயன்றதாகப் பருத்தித்துறைப் பொலிசார் குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்

இக்கொலை முயற்சி வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தின் நீதவான் திரு. கே. எஸ மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவந்ததைத் தொடர்ந்து நீதவான் இக்கொலை முயற்சி வழக்கை யாழ். நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தியுள்ளரர். [க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு அப்புளானையில் நல்ல நீர் இணற்றுடன் மூன்று பக்க மதில் கட்டப்பட்ட நல்ல சூழலில் 4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும், க. செல்லத்துரை, அப்புளானை. கோப்பாய், வடக்கு. 0547

கொண்டாவில் இருபாலை ரோட்டில் மின்தறி நெசவுச்சாலைக்கு அருகாமையில் உள்ள தோட்டக்காணியில் 18 பரப்பு விற்பனைக்குண்டு. இக்காணி துண்டுகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்த சந்திரசேகரம் சிவசுப்பிரமணியத்துடன் தொடர்புகொள்ளவும். 0539

புதிதாக அமைக்கப்பட்ட கோட்டா அரிசி ஆலை விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு கொடுக்கப்படும். விபரங்களுக்கு: சாந்தி மில், வட்டுக்கோட்டை. 0520

நல்ல நிலையில் 36 ஸ்ரீ 356 மசி பேர்குசன் உழவு இயந்திரமும், றெயிலர், டிஸ்லர், படகுகள், பரன், இயந்திரத் தெளிப்பான், கைத் தெளிப்பான் ஆகியவை ஒருமித்து அல்லது வெவ்வேறாக விற்கப்படும். ச. சிவகுருநாதர் சங்குவேலி, மானிப்பாய். 0518

## தேவை

ஓர் பாரிய கல்லுடைக்கும் இயந்திரம் நிறுவுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து 10 மைல் தூரத்துக்குள் பெருந் தெருக்களுக்கண்மையில் அதிக்கேதி வாய்ந்த மின் விநியோக நல்ல நன்னீர் வசதிகளும் கொண்ட 50 பரப்புக்குமேல் காணி தேவை. நேரில் சனி, ஞாயிறு தினங்களில் 50, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் அல்லது கடிதமூலம் விளம்பரதாரர் த. பெ. இல: 487, கொழும்பு என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 0534

அச்சுவேலி அல்லது வயாவிளான் பகுதியில் எடுக்கப்படும் (Lime Stone) கற்கள் இடைத்தட்ட 18" அளவுவரையில் மாதாந்தம் 1000 கன அடி வீதம் இரண்டு வருடங்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 10 மைல் தூரத்துக்குள் நிறுவப்படவிருக்கும் கல்லுடைக்கும் இயந்திரப்பகுதிக்கு ஒழுங்காக விநியோகிக்கக்கூடிய போக்குவரத்து வசதிகளையுடைய ஒப்பந்தகாரரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விபரங்களுக்கு நேரில் சனி, ஞாயிறு தினங்களில் 50, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், அல்லது கடிதமூலம் விளம்பரதாரர், த. பெ. இல: 487, கொழும்பு, என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 0535

இறைவடிகள் மில்லில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. தேவன் இறைவடிகள் மில், 159 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0540

## விற்பனைக்கு

நீயூ தியேட்டர் அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி 478/2, கே. கே. எஸ். ரோட், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். 0549

திறந்தமுறையில் அனுபவம் பெற்ற ஆலோசகர்களுடன் தொடர்புகொள்ளவும். காணிகள் சிவகுருநாதர் வீதி, இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம் நாச்சிமார்கோயிலடியில் பிறவுண் ரோட், பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம் சகல வசதிகளுடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: பதிவு இல. 13575, செல்வாஸ் ஆலோசகர் நிலையம், 478/2, கே. கே. எஸ். ரோட். சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். 0550

குடியிருக்கும் நிலம் இரண்டறை வீட்டுடன் கிணறு வசதியோடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளும் விலாசம்: "இராஜ் பவான்", 272, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 0569

தஞ்சாவூரில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய வீணைகள் இரண்டு விற்பனைக்கு உள்ளன. இ. திருஞானசம்பந்தன், கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 0570

இளம்தென்னைமரங்களுடன் 4 பரப்புக் காணி ஒரு ரோட் கோப்பாயில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: B. மகேந்திரா, றீகல் சினிமா, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7345. 0551

ஸ்ரான்லி வீதியில் காலியான கடை, யாழ்ப்பாண மனின் கல்லூரிக்கு அண்மையில் ரோட்டுக்கரையில் 2 அறைகளும், ஒரு வீடும் விற்பனைக்கு உண்டு. 78, அரசடி வீதி, வண்ணார்பண்ணை. 0545

நல்ல நிலையிலுள்ள 9 ஸ்ரீ தொடரிலக்க "மொறிஸ் ஒக்ஸ்போர்ட்" கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜி. தோமஸ், மின்சார நிலைய வீதி, சுன்னாகம். தொலைபேசி: 320. (0559)

## தேவை

எமது காரியாலயத்துக்கு பியோன் வேலைக்கு ஆள் தேவைப்படுகிறது. 16—21 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். த. பெ. இலக்கம் - 87, யாழ்ப்பாணம். 0564

## கல்வி

German Language புதிய வகுப்புக்கள் 10-8-81-ல் ஆரம்பமாகின்றன. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம் சபாநாயகம், "றாஜ் கொட்" 33 கண்டி வீதி, யாழ்ப்பாணம். 0560

Advanced Level இரசாயனம், தூயகணிதம், பிரயோக கணிதம் கற்பிக்கப்படும் பட்டதாரி, 85 சிவன் கோவிலடி, திருநெல்வேலி. 0556

## பயிற்சி

செய்முறை அறிமுறையுடன் வெல்டிங் (Electrical Welding) பயிற்சி வகுப்பு ஆரம்பம் 19-8-81, C. E. T. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22 ராணமயாச்செட்டியார் வீதி, (சாந்தினி மாவிற்கு முன்) யாழ்ப்பாணம். 0555

## வைத்தியம்

மனநோய், வலி, நாட்பட்ட தாயினும் உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும் நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: வி. சி. சந்திரன், 218/5, பலாலி வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம் 0506

## தவறிவிட்டது

F 243817 இலக்கங்கொண்ட கடவுச்சீட்டு (பாஸ்போட்) யாழ். பஸ்நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஞ. அமிர்தராஜா, 243, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 0565

## காணவில்லை

மட்டக்களப்பைச் சேர்ந்த இராசையா அம்பிகாவதி என்பவரை சில தினங்களாகக் காணவில்லை. இவர் கடைசியாக யாழ்ப்பாணம் சிவன் கோவில் வடக்கு வீதியிலுள்ள 125-ம் இலக்க இல்லத்தில் வசித்து வந்தவரென்றும், 4 அடி உயரமுள்ளவராயும், பொது நிறம் உடையவராயும், வலது பக்க மூக்கில் மச்சமும், கடைசியாகக் காணப்படும்போது வெள்ளைச்சாரமும், ரோஸ் நிற சேட்டும் அணிந்திருந்தாகவும் கூறப்படுகின்றது. இவரைக் கண்டவர்கள் அண்மையிலுள்ள பொலிஸ்நிலையத்திலோ, முன்னர் வசித்த இடத்திலோ தகவல் தந்தால் சன்மானம் வழங்கப்படும். தகவல்: அமரசிங்கம் சந்திரன், 125, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 0561

## WANTED

Chartered Accountant seeks Accounts Trainees, Accountancy Students preferred. Apply: Tax & Accounting Services, P. O. Box 87, Jaffna. 0563

## FOR SALE

Dispensing Counter Bottles, Scales etc for sale Mrs. K. Rajaratnam, "Prasanthi", Thalaiyali, Kokuvil. 0572

## திருட்டு அதிகரிப்பு

[மன்னார்]

மன்னார் பட்டினத்தில் அடிக்கடி ஏற்படும் மின்சார வெட்டினால் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. இதன்காரணமாக பொருட்கள் களவுபடைந்து வருவதோடு கவலையும் தெரிவிக்கின்றனர்.

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் (கொடிகாமம்) 6000 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கு உள்ளது. ரூபா 150/- முற்பணம் கட்டி கேள்விப் பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். 17-8-81-ந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணி வரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பொருட்களைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்.
தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம், கொடிகாமம்,
6-8-81. (0552)

### புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர் தரம் 111

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் 22-8 1981 வரை எங்களால் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன. விண்ணப்பங்கள் தலைவர், புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு என முகவரியிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொதுமுகாமையாளர் தரம் 111" எனக் குறிக்கப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

தகைமைகள் பற்றிய விபரங்களுக்கும் வேறு விபரங்களுக்கும் 15009/12 ஏ இலக்க 12-5 72-ம் திகதிய வர்த்தமானியைப் பார்க்கவும்.

தலைவர்.
5-8-1981. (0553)

## வாலிபர் சங்க வாசிகசாலை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துவாலிபர் சங்கம் வாசிகசாலை ஆகியவற்றிற்கான அடிக்கல்லை யாழ் மாவட்ட நீதிபதி திரு கே. பாலகிட்ணர் நாட்டி வைத்தார்.

இக் கட்டிடத்தை இந்த வாலிபர்சங்க இளைஞர்கள் சிரமதான முறையில் மேற்கொண்டுள்ளனர். (மல)

### காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

2500 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. 21-8-81 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் மீளப்பெறும் வைப்புப் பணமாக ரூபா 500/-உம் செலுத்தவேண்டும். நிபந்தனைகளையும் விபரங்களையும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை யாவும் தலைவர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், காரைநகர் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இக்கேள்விப்பத்திரம் சம்பந்தமாக தீர்மானிப்பதற்கு உரிமையுண்டு.

குறிப்பு:

காரியாலயத்தில் ரூபா 2/- செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர்.
1981-8-7. [0566]

## காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள், துரிதமாய் அபிவிருத்தி அடைந்துவரும் பகுதியில், வீடமைப்புத் திட்டங்களுக்கு அண்மையில், ஓட்டுமடம். அரசடி வீதியில் ஒவ்வொன்றும் சுமார் இரண்டு நேர் பரப்பு உள்ள 12 துண்டுக் காணிகள் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: த. சோமசுந்தரம், 65, அரசடி வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி: 7 0 2 0

0493

### தெல்லிப்பழை

## ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம்

அன்புடையீர்,

தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலையின் சங்கத்தின் 31-ம் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1981-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30-ந் திகதி (30-8-81) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரேரணைகள் இருந்தால் தமிழில் எழுதப்பட்டு பிரேரிப்பவர், அனுமதிப்பவர் ஆகிய இருவராலும் கையொப்பமிடப்பட்டுக் காரியதரிசிக்கு 16-8 81க்குப் பிந்தாமல் அனுப்பப்படவேண்டும். பிந்தி அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அங்கத்தவர்கள் சந்தாப்பணத்தை நேரத்தில் பார்வையிடலாம். முகவரியில் மாற்றமிருப்பின் தயவுசெய்து அறிவிக்கவும்.

இங்ஙனம்
தங்கள் கூட்டுறவு சேவைக்குரிய
தெல்லிப்பழை. (0557) தி. பூ. முருகையா, கௌரவ காரியதரிசி.

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், போன்: 7199.

யாழ்ப்பாணம் தந்தி: வைரம்

## அரசாங்கத்தின் மீதான

# நம்பிக்கையில்லா தீர்மானம் மீது எழுந்த வாதப்பிரதிவாதங்கள்

அரசாங்கத்துக்கெதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது அது 'சுகப்பிரசவமாகுமா?' அல்லது 'குறைப்பிரசவமாகுமா?' அல்லது 'கருச்சிதைவாகவே' போய்விடுமா? என்ற சந்தேகம் அது 'கருவுற்ற'நாள்முதலே எழுந்து கொண்டிருந்தது.

சந்தேகித்தவிதத்திலேயே 'கடந்த வியாழக்கிழமை அது கரு•சிதைவாகியது!' கடும் வேதனையையும் கொடுத்தது! அரசாங்கதரப்பில் எழுப்பப்பட்ட ஒழுங்குப்பிரச்னையை ஏற்றுக்கொண்டு, சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபையில் பிரேரிக்கவோ விவாதிக்கவோ அனுமதி மறுத்தார். அந்த அளவில் அப்பிரேரணை கருச்சிதைவாகியது.

எதிர்பார்த்த விதத்திலேயே, முன்னைய சந்தர்ப்பங்களில் அரசாங்கதரப்பினர் நிகழ்த்திய வாதங்களை எதிர்க்கட்சியினரும், எதிர்க்கட்சியினரின் வாதங்களை அரசாங்கத்தினரும் இந்த ஒழுங்குப்பிரச்னையில் தத்தமக்கு ஆதாரமாக்கினர்.

சபை ஒழுங்குப்பத்திரத்தில் இடம்பெற்றிருந்தவாறே செவ்வாய்க்கிழமை சபை அலுவல்கள் முடிந்ததும் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தாமும் மற்றும் 16 எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து முன்னறிவித்தல்கொடுத்திருந்த அரசாங்கம் மீதான நம்பிக்கையில்லாப்பிரேரணையை பிரேரிப்பதற்காக எழுந்தவேளை அவருக்கு எதிர்ப்புறமாக ''ஓர் ஒழுங்குப் பிரச்னை'' என்ற படியே பிரதிநிதியமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜாவும் எழுந்தார்! பிரேரணையின் ஒரு பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ள யாழ் அபிவிருத்திசபைத் தேர்தல்கள் குறித்து நீதிமன்றத்தின்முன் வழக்கொன்று தாக்கல்செய்யப்பட்டிருப்பதனால் இப் பிரேரணையை இப்போது பிரேரிக்க அனுமதிக்கமுடியாது என்று, சபை நிரந்தரவிதிகளின் கீழ் ஒழுங்குப்பிரச்னையை மிகவும் பொருத்தமானவரான பிரதி நீதியமைச்சர் கிளப்பினர்.

இந்தப்பிரிவு சபையில் உரையாற்றும் உறுப்பினர்களுக்கான ஒரு விதியே. உறுப்பினர் ஒருவர் சபையில் உரையாற்றும்போதுதான் அது அமைவாகுமே தவிர, தனியான இப் பிரேரணைக்கு அது பொருந்தாது; அதைக் கட்டுப்படுத்தாது. என்று முன்னர் திருமதி சிறிமாவோவின தும் திரு பீலிக்ஸினதும் குடியியல் உரிமைகளை ரத்துச் செய்யும் தீர்மானம்மீது எதிர்க்கட்சியினர் எழுப்பிய இத்தகைய ஒழுங்குப்பிரச்னைமீது அரசாங்கத்தினரின் வாதமாக இருந்த இதனை திரு. அமிர்தலிங்கம் தனக்கு மேற்கோளாக்கினர்.

இப்பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டபின்னரேயே வழக்கு தாக்கல்செய்யப்பட்டது என்றும் கூறி, இத்தகைய சந்தர்ப்பங்களில் நீங்களே இவற்றை ஏற்று முன்னர் தீர்ப்பளித்திருக்கிறீர்கள் என்றும் திரு. அமிர்தலிங்கம் சபாநாயகரிடம் கூறினர்.

**- மாலி -**

யாழ் தேர்தல் சம்பந்தமாக மாத்திரமன்றி, வேறும் பல விடயங்களோடு இப்பிரேரணை கொண்டிருப்பதால் இவ்வொழுங்குப் பிரச்னை இப் பிரேரணையைப் பிரேரிப்பதையோ, விவாதிப்பதையோ தடைசெய்ய முடியாது, ஆனல் விவாதத்தில் உரையாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினர்கள் விடயத்தில அவசியமானல் சபாநாயகர் கட்டுப்படுத்தலாம் என்பது எதிர்க்கட்சித் தலைவரின் வாதமாகும்.

''திருமதி சிறிமாவோவின் குடியியல் உரிமை ரத்து தீர்மானத்தின்போது நீங்கள் என்ன கூறினீர்கள்? சட்டமூலம் தவிர வேறுஎது தொடர்பாகவும் நீதிமன்றத்தின்முன் தொடர்புள்ள விடயங்கள் மீது சபையில் விவாதிக்கமுடியாது என்றீர்கள் இப்போது என்ன கூறுகிறீர்கள்?'' என்று கேட்ட பிரதிபொதுநிர்வாக அமைச்சர் ஹரீந்திர கொரியாவிடம் ''அப்போது சபாநாயகரின் தீர்ப்பு என்னவாக இருந்தது'' என்று கேட்டார் நல்லூர் உறுப்பினர்.

அது ஒரு 'தீர்மானம்;' இது 'பிரேரணை'; பிரேரணையை அனுமதிக்கமுடியாது என்றார் கொரியா. சபை நிரந்தரவிதிகளின் 37, 38 [1] பிரிவுகளுக்கமையவேண்டுமானல் பிரேரணையில் அபிவிருத்திசபைத் தேர்தல்கள் சம்பந்தமானவற்றை நீக்கி அதனைத் திருத்தம்செய்து சமர்ப்பிக்கலாம் என்றார் அவர்.

சபாநாயகர் பாக்கீர் மாக்காரும் சம்பந்தப்பட்ட முன்னைய நடவடிக்கை ஒன்றை சபையில் மேற்கோளாகக்காட்டினார் அமைச்சர் அத்துலத் முதலி!

—1966 செப்டம்பர் 24ந் தேதி தொம்பே முதலாலியின் மரணம் சம்பந்தமான விடயமொன்றில் திருவாளர்கள் ஜக்னல், பாக்கீர்மாக்கார், பீட்டர் கெனமன், பீலிக்ஸ் ஆகியோர் பேசியபோது, நீதிமன்ற விசாரணையிலுள்ள இவ்விடயம்பற்றி இங்கு பேசமுடியாது என்று சபாநாயகர் ஷேர்லி கொரியா அப்போது தீர்ப்பளித்திருந்தார் என்று அமைச்சர் ''ஹன்சாட்டி''லிருந்து அதனை வாசித்தார் '''இதில் பேசியவர்கள்......... பேருவளை உறுப்பினர் பாக்கீர்மாக்கார்......'' என்று திரு. அத்துலத்முதலி கூறியபோது உறுப்பினர்கள் சிரித்தபடியே சபாநாயகரை நோக்கினர்கள்

வேறொரு தினத்தில் - வழக்கு முடிவடைந்தபின்னர் — இப் பிரேரணையைக் கொண்டுவருவதில் தமக்கொன்றும் ஆட்சேபனை இல்லைஎன்றும் அமைச்சர் கூறினர்.

''உங்களுக்கு முன்னைய சபாநாயகரான இராஜாங்க அமைச்சரும் பின்னர் நீங்களும் முன்னைய சந்தர்ப்பங்களில் அளித்துள்ள தீர்ப்புக்களே இவ்விடத்திலும் அமைவாகின்றன'' என்று அத்தீர்ப்புக்களையும் அப்போது சபையில் நிகழ்ந்த சில வாதங்களையும் 'ஹன்சாட்'டிலிருந்து வாசித்தார், ஷேர்லி கொரியா சபாநாயகராகவிருந்தபோது பிரதிச்சபாநாயகராகவிருந்த நல்லூர் உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம்.

பிரேரணையிலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவிலும் காணப்படும் பல வாசகங்கள் ஒத்தவையாகவிருக்கின்றன என்று திரு. அத்துலத்முதலி கூறியிருந்தபோது இந்த மனுவைத் தாக்கல் செய்தவர் யார்? என்ற வினவை எழுப்பி அதற்குப் பதிலும் கூறிய திரு. சிவசிதம்பரம், இப்பிரச்னை இங்கு எழும் என்று அவருக்குத் தெரிந்துதான் அப்படி வேண்டுமென்றே செயல்பட்டுள்ளார் என்றும் குற்றமும் சாட்டினர்.

சபையின் பின்வரிசை உறுப்பினரான சந்திரா ரணதுங்கா (மாவனல்ல) 'ஏஸ்கின் மே'யையும் மேற்கோள் காட்டினர்.

'ஏஸ்கின் மே' யோ சபை நிரந்தரவிதியோ அவை சபையில் உரையாற்றும்போது கடைப்பிடிக்கவேண்டியவற்றையே வலியுறுத்துகின்றன; பிரேரணை பிரேரிக்கப்படுவதை அவை தடுப்பதாக இங்கு ஏதும் காட்டப்படவில்லை; அப்படித் தடுக்கவும் முடியாது என்றார் ''பொதுவுடமை'' வழக்கறிஞர் சரத் முத்தட்டுவேகம

பிரேரணையை வாசித்த அவர்;

இந்த ஐ. தே. க. அரசாங்கமானது மூன்றரை வருடகால தவறான ஆட்சியுடன்-

இந்நாட்டு மக்கள் மீது தாங்கொணு பழுக்களைச் சுமத்தியுள்ளதாலும்;

சனநாயகத்தைப் பற்றிப் பிதற்றும் அதேவேளை மக்களின் சனநாயக உரிமைகளை மென்மேலும் பறித்துள்ளதாலும்;

சிறந்த வாழ்க்கைநிலையை எய்தும்பொருட்டும், அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும்பொருட்டுமான தொழிலாள வர்க்கத்தினது நடவடிக்கைகளையும் உண்மையான அரசியல் எதிர்ப்புக்களையும் நசுக்கியுள்ளமையாலும்;

என்ற இவ்விடயங்கள் தொடர்பாகவும் வழக்குகள் தாக்கலாகியிருக்கின்றனவா? என்று கேட்டபோது சபையில் சிரிப்பு எழுந்தது.

இந்த ஒழுஙகுப் பிரச்னை மீது ஹப்புத்தளை வழக்கறிஞர் லொக்குபண்டாவின் வாதம்தான் சபையில் பெரும் சர்ச்சையையும் பலத்த அமைதியையும் ஏற்படுத்திவிட்டது.

---

பூபேஷ் குப்தாவின் மறைவுக்கு

# க. மு. கட்சியின் யாழ். கிளை அனுதாபம்

[யாழ்ப்பாணம்]

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதிய தலைவர்களில் ஒருவரான திரு. பூபேஷ்குப்தாவின் மரணம் குறித்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட கிளை ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப்பீடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அச்செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது:-

இந்திய இடதுசாரி இயக்கத்தின் முனனேடிகளில் ஒருவரும், சிறந்த தேசிய விடுதலைப்போராட்ட வீரரும் நீண்டகாலமாக இந்திய நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவரும், கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்களில் ஒருவருமான தோழர் பூபேஷ்குப்தாவின் மறைவையொட்டி இலங்கை கம்யூனிஷ்ட்கட்சியின் யாழ் மாவட்டக்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றது.

நமது கட்சியின் ஸ்தாபகத் தோழர்களான டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, பீட்டர் கெனமன், அ. வைத்திலிங்கம், அமரர். பொன். கந்தையா போன்றோருடன் இவர் இங்கிலாந்தில் இடதுசாரி இயக்கத்தில் ஒன்றிணைந்து வேலை செய்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் இந்தியத் தொழிலாளி வர்க்கத்திற்கும், குறிப்பாக முற்போக்கு இயக்கங்களுக்கும் பாரிய பங்களிப்புச் செய்தவராவர்.

கட்சியின் பிரபல ஆங்கில அரசியல் வார இதழான ''நியூ ஏஜ்'' இன் ஆசிரியர் பொறுப்பையும் ஏற்று திறம்படச் சேவை செய்து வந்துள்ளார்.

தோழர் பூபேஷ்குப்தாவின் இழப்பு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இந்தியத் தொழிலாளிவர்க்கத்திற்கும் மாத்திரமல்ல உலகத் தொழிலாளி வர்க்கத்திற்கே பேரிழப்பாகும்.

---



## இன்று நல்லூர்க் கந்தன் 5-ம் திருவிழா

தெய்வத் திருமலைச்
செங்கோட்டில்
வாழுஞ் செழுஞ்சுடரே
வை வைத்த வேற்படை
வானவ
னேமற வேனுனை நான்
ஐவர்க்கு இடம்பெறக்
காலிரண்டு
ஒட்டி அதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னேவந்து காத்தருளே

— கந்தரலங்காரம்

---

# நல்லெண்ணம், சமூக சகவாழ்வு; லயன்ஸ் கழகத்தின் நோக்கம்

## டாக்டர் யோகு பசுபதி விளக்கம்

[புலோலி]

'உலகரீதியாக பரஸ்பர நல்லெண்ணம், சமூக சகவாழ்வு தேசிய ஒற்றுமை ஆகியனவற்றை சேவை செய்வதே லயன்ஸ் கழகத்தின் நோக்கமாகும் லயன்ஸ் கழகத்தோடு இணைந்து மக்களுக்குச் சேவை செல்வதன் மூலம் நாம் வாழ்வில் பெருமிதமடையலாம்.

இவ்வாறு பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட லயன் எஸ்: சிவராசசிங்கம் பதவியேற்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய டாக்டர் யோகு பசுபதி குறிப்பிட்டார்! லயன்ஸ்கழக முன்னைநாள் தலைவர் திரு. கந்தையா கணேசன் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. யோகு பசுபதி குறிப்பிட்டதாவது:

லயன்ஸ்கழகம் மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்துவிட்டது. மக்களின் கல்வி சுகாதாரம், பொருளாதாரம் ஆகியனவற்றிற்காக மட்டுமின்றி மிக முக்கியத்துவம் வாய்ந்த தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதிலும் லயன்ஸ் கழகம் பெரும பங்கு வகித்துவருகின்றது.

பருத்தித்துறை லயன்ஸ்கழகம் மிகச் சிறப்பாக இயங்கி வடமராட்சிப்பகுதி மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கி வருவது பாராட்டப்படவேண்டியதாகும்.

தலைவராகப் பதவியேற்ற திரு. சிவராசசிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

எமது கழகம் இந்த ஆண்டு சமூக, பொருளாதார, கலை கலாச்சார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகப் பலதிட்டங்களைத் தீட்டியுள்ளோம். முக்கியமாக பாடசாலை மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்துவதற்கும் வசதியற்றவர்களுக்கு சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நாம் பெரு முயற்சி செய்யவுள்ளோம். இதற்கு சகலரும் ஒத்துழைப்பும் உதவியும் வழங்க வேண்டும்.

---

# ''கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சிறு நீதிமன்றங்கள் போல் செயல்பட வேண்டும்'

## மாவட்டசபை உறுப்பினர் 'மூவர்' கருத்து

[யாழ்ப்பாணம்]

''யாழ். மாவட்டத்திலுள்ள சில பொலிஸ் நிலையங்களை இராணுவம் பொறுப்பேற்றுள்ளதால மக்கள் தமது பிரச்னைகளை தீர்ப்பதற்கு இன்று அங்கு செல்ல முடியாத நிலையிலுள்ளனர். இதனல் கிராம அபிவிருத்திச் சங்கங்களைப் பயன்படுத்தி தமக்குள்ளே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்க்க மக்கள் முன்வரவேண்டும். கிராம அபிவிருத்தி சங்கங்களும் சிறு நீதிமன்றங்கள் போல் இயங்கி, அந்தந்தப் பகுதி மக்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கவேண்டும்.''

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. ச பூபாலசிங்கம் பண்ணுகம கல்விநிலை, கலாச்சார ஒன்றியம் ஏற்பாடு செய்த கிராமஅபிவிருத்தி சங்கக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

''யாழ். மாவட்டத்தில் ஆறு பொலிஸ் நிலையங்களை அரசாங்கம் மூடியதன் மூலம் எமது பிரச்னைகளை நாமே தீர்த்துக் கொளளக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை நாம் நன்கு பயன்படுத்தவேண்டும். பொலிஸ், ராணுவ ஒத்துழைப்பில்லாமலேயே வாழ முடியுமென்றநிலை எமது பகுதிகளில் ஏற்படவேண்டும்.

''இக்கிராம அபிவிருத்தி சங்கத்தின் முறையைப் பின்பற்றி ஏனைய பகுதிகளிலுள்ள சங்கங்களும் ஒரே அணியின் கீழ் கிராம அபிவிருத்தி சங்கங்களை அமைத்துச் செயல்படவேண்டும். சிறுபிணக்குகளை இவற்றின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம். தீர்க்கமுடியாத பிரச்னைகளுக்கு மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்களாகிய எம்மை அணுகி தீர்வுகாணலாம்.

''அரசாங்கநிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் உங்கள் கிராமத்திற்கு நேரில் வந்து உங்களின் ஆலோசனைக்கமைய திட்டங்களை நிறைவேற்றி வைப்போம்'' என்றார்.

# கூட்டுறவே நாட்டுயர்வு!

[சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் 10-வது ஆண்டு கூட்டுறவாளர் தின விழாவை இன்று கொண்டாடுவதையொட்டி இக் கட்டுரை வெளியிடப்படுகிறது!]

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கி 52,000 மக்களையும், 9820 அங்கத்தவர்களையும் கொண்டு செயலாற்றிவருகின்றது. இது ஆரம்ப காலத்தில் ஒருமொத்த நிலையத்துடன் ஆரம்பித்து தற்பொழுது மக்களின் தேவைகளும், அபிலாசைகளும் காலத்திற்குக்காலம் அதிகரித்துக்கொண்டுவருவதைக் கருத்திற்கொண்டு அவர்களின் தேவைகளுக்கு ஏற்றமுறையில் மொத்த நிலையங்களை அதிகரித்துத் தற்போது ஐந்து மொத்த நிலையங்களைத் தன்னகத்தே அடக்கியுள்ளது. அவை சுன்னாகம், ஏழாலை, இணுவில், புன்னாலைக்கட்டுவன் ஆகிய கிராமங்களில் அவ்வப்பகுதிகளோடு சேர்ந்த கிளைகளுக்கும், உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கும், பொருள் விநியோகத்தை மிக விரைவாகவும், இலாபகரமாகவும் செய்துவருகின்றது.

இணுவில், ஏழாலை, குப்பிழான் ஆகிய கிராமங்களில் மூன்று கிராமிய வங்கிகள் இருந்து சேவையாற்றிவருகின்றன.

மேலும் கூட்டுறவு ஆணையாளரின் பணிப்புரைக்கு அமைய ஊதியம், நாட்கூலி, மணிக்கொடை, சேமலாப நிதி, நம்பிக்கைநிதி ஆகிய சுற்றறைப் பணியாளர்களுக்கு ஒழுங்காக வழங்கிவருகிறது கூட்டுறவு அடிப்படையின் தத்துவத்தை முன்வைத்து நெறி நின்று இயங்கிவருவதே இத்தனைச் சிறப்புக்கும் முக்கிய காரணமாகும். ஊதியத்திற்காகச் சேவைசெய்யாது தம்நாட்டிற்கும், மக்களுக்கும் செய்யும் இச்சேவை இறைவனுக்குச் செய்யும் சேவைக்கு ஒப்பானதாகும். நிற்க வெறும் ஊதியத்திற்காகச் சேவை செய்தால் பயனற்ற செயல்களுக்குப் பாவிக்கப்படும். ஊதியமாகக் கருத இடமளிக்கும் கூட்டுறவு அடிப்படைத் தத்துவம் மக்கள் சமமாக வாழ்தலும், அதன் பொருட்டு சமமாகப் பகிர்ந்தளித்தலுமே. மேலும் இப்பசைவை அன்பு, ஜீவகாருண்ணியம், ஒன்றிணைந்த சேவை யாகும். மேற்படி சேவையில் பகிர்ந்து அளித்தலில் பாகுபாடு ஏற்படுமாயின் விஷம் கலந்த உணவுக்கு ஒப்பாகிவிடும். நன்மை செய்யப்பிறந்தவனே மனிதன். மேலும் நன்மை செய்வதே எமது கடமையாக இருக்கவேண்டும். கடமைசெய்யப் பணிக்கிறது பகவத்கீதை தீமைசெய்பவர்களையும் மன்னித்து நன்மை செய்யப் பணிக்கிறது பைபிள். பகிர்ந்துண்டு வாழப் பணிக்கிறது ஓர் ஆன் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு.'

"கூட்டுறவு நாட்டுயர்வு" இதுவே எங்கள் தாரக மந்திரமும், சத்தியக் கூற்றுமாகும்.

—ச. முத்துலிங்கம்
தலைவர்
சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்.

---

வேறுநாடுகளின்

## உள் விவகாரங்களில் தலையிடவேண்டாம்

வாஷிங்டன் ஆக. 8

வேறு நாடுகளில் உள்ள விவகாரங்களில் தலையிடாதிருக்குமாறு அமெரிக்க சோவியத்யூனியன் ஆகிய இரு வல்லரசு நாடுகளையும் எகிப்து அதிபர் ஜனாப் அன்வர் சதாத் கேட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி றீகனை அவரது வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசியபின் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் இக்கருத்தைத் தெரிவித்தார்.

தமீபியாவை விடுவிக்க மேற்கு நாடுகள் தம் செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டும் என்றும் அவர் கூறினார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் அமெரிக்கா பேச்சு நடத்தவேண்டும் என்ற கருத்தையும் அவர் வலியுறுத்தினார்.

---

## தொண்டமானிடம் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பெருமளவு கிடைக்கக்கூடியதாகவுள்ள பனைவளவிலிருந்து மாட்டுத்தீன் உற்பத்திக்கும் பனைமட்டைகளிலிருந்து தும்பு உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடியவாறு நடவடிக்கைகளை எடுக்கவும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட பனம்பொருள் உற்பத்தியாளர் சங்கம் கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானைக் கேட்டுள்ளது. (இ)

---

# காம்பியா புரட்சியாளர்கள் தப்பி ஓட்டம்!

## பணயக்கைதிகள் தப்பினர்

பன்ஜால், ஆக. 8

காம்பியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்த மார்க்ஸிஸ்ட் கிளர்ச்சிக்காரர்களின் புரட்சிச்சதி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

காம்பியப் புரட்சிச் சதிக் கிளர்ச்சியாளர்கள் பணயக் கைதிகளை அப்படியே விட்டுவிட்டு தலைதெறிக்க ஓடித் தப்பிச் சென்றுவிட்டனர் எனச் செனகல் இராணுவம் தெரிவித்தது.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்த கிளர்ச்சிக்காரர்களை சரணடையுமாறு காம்பியா ஜனாதிபதி சேர் டாவுடா ஜவரா கடந்த இரு வாரமாக கோரிக்கை விடுத்திருந்தார்.

மேற்கு ஆபிரிக்காவின் சின்னஞ் சிறிய நாடான காம்பியாவில் ஆட்சியைக் கவிழ்க்க எடுக்கப்பட்ட முயற்சி செனிகல் நாட்டுத் துருப்புக்களின் உதவியுடன் முறியடிக்கப்பட்டதாக செனிகல் நாட்டு வானொலி தெரிவித்துள்ளது.

---

## வேலைநிறுத்தம் செய்த 500 பேர் வேலைநீக்கம்

வாஷிங்டன் ஆக. 8

ஜனாதிபதி றீகனின் காலக்கெடுவையும் பொருட்படுத்தாது வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்திய சுமார் [illegible]000 விமானக் கட்டுப்பாட்டாளர்க்கு வேலைநீக்கக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

இதையடுத்து விமான நிலையங்களை இயங்கவைப்பதற்கான புதிய திட்டத்தை றீகன் நிருவாகம் வகுக்கத்தொடங்கியுள்ளது.

விமானக்கட்டுப்பாட்டாளர்களின் வேலைநிறுத்தம் ஐந்தாவது தினமாகத் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. வேலைநிறுத்தத்தினால் அமெரிக்க விமானசேவை பாதிக்கப்பட்டிருக்கிறது. நிலைமையை சமாளிப்பதற்காக சிறிய விமான நிலையங்களில் கடமை புரியும் விமானக்கட்டுப்பாட்டாளர்களைத் திருப்பி அழைப்பதற்கான திட்டங்களை அரசு தயாரித்துவருகிறது. (ரு)

---

வீதிகள் சீர்திருத்தம்

# இளைஞர் சேவை மன்றம் முன்மாதிரி

(ஸ்கந்தபுரம்)

குன்றும் குழியுமாக பற்றைகள் நிரம்பிப் போக்குவரத்து நடைபெற முடியாதிருந்த ஸ்கந்தபுரம் வீதிகளில் பல திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய சேவை மன்றத்தைச் சேர்ந்த 25க்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளுமே மேற்படி வீதிகளைச் செப்பனிட்டுள்ளனர்.

தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி திரு. இராசநாயகம் தலைமையில் இளைஞர்களும் யுவதிகளுமாக சுமார் ஒரு மாத காலம் மேற்படி வேலைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வீதிகள் பல வருடங்களாகக் கவனிப்பாரற்று இருந்தமையால் மேற்படி வீதிகளில் குன்றும் குழியுமாகவும் சேறு பல வீதிகளில் பாம்புப் புற்றுகள் முளைத்தும் காணப்பட்டன.

---

## நூல்நிலையஉதவிப் பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

திரு. சி. முருகவேள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நூல்நிலைய உதவிப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். 1980-ல் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட இவர் இப்பொழுது நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்.

இவர் லண்டன் பல்கலைக் கழகத்தில் நூலகக் கல்வியில் உயர் பட்டங்கள் பெற்றவர்.

சித்த ஆயுர்வேதப்பற்றி நூல்கள் கவடின் ஆகியவற்றின் விபரப் பட்டியலை வெளியிட்டுள்ளார். மேலும் நூலகவியல் பற்றிய ஒரு நூலினைத் தமிழில் எழுதும் முயற்சியில் தற்பொழுது ஈடுபட்டுள்ளார். அத்துடன் இவர் கந்தபுராணத்தை டான்டேயின் "டிவைன் கொமெடி" என்ற நூலுடன் ஒப்புநோக்கி ஆய்வொன்றினை மேற்கொண்டுள்ளார்.

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. முருகவேள் தமது ஆரம்பக் கல்வியை ஏழாலை சைவத் தமிழ் வித்தியாசாலையிலும் பின் பரமேஸ்வராக் கல்லூரியிலும் பெற்றார்.





■ சிக்கனமானது ■ அதிக சக்திவாய்ந்தது ■ நெற்பயிரையும் காய்கறிகளையும் தாக்கும் பூச்சிகளை அழிக்க வல்லது.

LANKEM

லங்கெம் சிலோன் லிமிட்டெட் 760 - 762 பேஸ்லைன் ரோட், கொழும்பு - 9. தொலைபேசி: 98292 - 6

200 மி. லீ. - ரூ 34-00 400 மி. லீ. - ரூ. 62-00

Grant, K & E 4017

4-வது ஹவுஸ்புல் வாரம்
ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்

வெலிங்டன்
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-30
அன்னை வேளாங்கண்ணி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
இரேவதி சோமாஸ்கந்தன்
இவளும் ஒரு பெண்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-30, 9-45
பாக்கியராஜ்-அஸ்வினி-சங்கிலி முருகன்
ஒரு கை ஓசை

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00 9-30
THE ENFORCER
14-ந் திகதி முதல்!
சங்கராபரணம்

வெற்றிகரமான 5-வது வாரம்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
★ எம். ஜி. ஆர், ★ லதா
பல்லாண்டு வாழ்க
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
The Body Stealers
வரும் அடுத்த வெளியீடு
பாக்கியராஜாவின்
சுவர் இல்லாத சித்திரங்கள்

மகத்தான 2-வது வெற்றி வாரம்
சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
வி.பி. கணேசன், கீதா குமாரசிங்கா
சுவர்ணா, மரிக்கார் எஸ். ராமதாஸ்
கே. எஸ். பாலச்சந்திரன், மற்றும் பலர் நடித்த
நாடு போற்ற வாழ்க"
தென்னகத் தமிழ்ப்படத் தயாரிப்புகளுக்கு
ஈடுகொடுக்கும் தரமான ஈழத் தயாரிப்பு!

## ஓய்வுபெற்றார்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் நீண்ட காலமாக மருந்து கலவையாளராகக் கடமையாற்றிய திரு. க. நடராசா கடந்த மாதம் தொடக்கம் தனது பதவியிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

அகில இலங்கை மருந்து கலவையாளர்கள் (டிஸ்பென்சர்கள்) சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினராக நீண்டகாலம் சேவையாற்றிய திரு. நடராசா சங்கத்தின் யாழ் மாவட்ட கிளையின் செயலாளராகவும், தலைவராகவும் பல தடவைகள் கடமையாற்றியுள்ளார்.

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினர் வைத்தியப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சந்திரய்யா தலைமையில் இவருக்கு சேவை நலம் பாராட்டு விழா நடத்தினர். (ஈ)

## குடிநீர் தட்டுப்பாடு

(கந்தபுரம்)

கிளிநொச்சியிலுள்ள அரசாங்க காரியாலயங்களில் வேலைசெய்வோர் வசித்து வரும் அரசாங்க விடுதிகளிலும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ்விடுதிகளிலுள்ள கிணற்று நீர் அறவே வற்றிவிட்டதனால் தங்களுக்குக் குடிநீர் தட்டுப்பாட்டுடன் ஏனைய தேவைகளுக்கும் நீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அத்தட்டுப்பாட்டை நீக்க பவசர் மூலமாகவாவது தண்ணீர் தரும்படி காணி அதிகாரிக்கு மேற்படி அரசாங்க இல்ல குடியிருப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

## சதாசிவம் கமிஷன் விசாரணை நிறுத்தம்

சென்னை, ஆக. 8

சதாசிவம் கமிஷன் விசாரணை மூன்று' திட்டமிட்டபடி 10-ம் திகதியன்று ஆரம்பமாகாது. கமிஷனுக்கு எதிராக நீதிமன்றத்தில் நடைபெற இருக்கும் வழக்கு விசாரணை காரணமாகவே கமிஷன் விசாரணை நிறுத்தப்பட்டுள்ளது.

கமிஷனுக்கு எதிரான வழக்கு இம்மாதம் 17ம் திகதி ஐந்து நீதிபதிகள் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. [ரு]

பனுட்டு, பனம்விதைகள்
கொள்வனவு

எதிர்வரும் பருவகாலத்தில்
பனம்பொருள் அபிவிருத்திச் சபை
பொதுமக்களிடம் இருந்து பனம் விதைகளையும்,
உற்பத்தியாளர்களிடமிருந்து ...
(இலவச உற்பத்தி வழிகாட்டல்கள் வழங்கப்படும்)
தரமான பனுட்டு, பாணிப் பனுட்டு பனம் கற்கண்டு,
புழுக்கொடியல், ஒடியல் மா,
குட்டான் பனங்கட்டி,
மற்றும் ஏனைய கைப்பணிப் பொருட்களையும்
நிர்ணயமான விலை கொடுத்துக் கொள்வனவு செய்வதற்குத்
தீர்மானிக்கப்பட்டமையால்
வழங்குனர்கள் சபையுடன் நேரில் தொடர்பு கொள்ளுமாறு
வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

பொது முகாமையாளர்,
பனம்பொருள் அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்பு செயலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(6531)

## கோவிலில் திருட முயற்சி

(திருநெல்வேலி)

பகல்நேரத்தில் வயிரவர் ஆலய திருப்பணி உண்டியலை திருட முயன்ற வாலிபர் ஒருவர் அயலவர்களைக் கண்டதும் ஓடிவிட முயன்றுள்ளார். ஆனால் அயலவர்கள் இவரைத் துரத்திப்பிடித்தனர். இச்சம்பவம் திருநெல்வேலி பாடசாலை வீதியில் உள்ள வயிரவர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது. அயலவர்களால் பிடிபட்ட மேற்படி வாலிபர் யாழ். பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். யாழ் பொலிசார் விசாரணைசெய்துவருகின்றனர்.

## சைக்கிளில் சுற்றுலா

(அரியாலை)

உடுவில் தெற்கைச் சேர்ந்த 66 வயதுள்ள திரு. தம்பிமுத்து அரசரத்தினம் அவர்கள் சைக்கிளில் பெரியமடு, மட்டக்களப்பு, தேற்றாத்தீவு புனித அந்தோனியார் ஆலயம் ஆகிய இடங்களுக்குத் தனது சுற்றுலாப் பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

காலஞ்சென்ற திரு தம்பிமுத்துவின் மகனான இவர் ருகலே டிவனில்லை தோட்டத்தில் டீமேக்கராகப் பதவி வகித்து இளைப்பாறிய பின்னர் கிளிநொச்சிப் பகுதியில் சிறந்த விவசாயியாக பணி புரிகிறார்.

வெலிங்டன் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி- ஸ்ரீபிரியா
கவரிமான்

யாழ். நகரில் மலிவு விலையில்
பொருட்கள்...
★ பேப்பர் வகைகள்
★ மின்சார பொருட்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ வீட்டுப் பாவனைப் பொருட்கள்
நியூஸ் பிரின்ட் பேப்பர் — பேங் பேப்பர்
(இறக்குமதி, உள்ளூர் செய்யப்பட்டது)
பேங் பேப்பர் கலர்
வைட் பிரின்டிங் (22 1/2x35) (20x30) (D/C)
TISSUE (ரிசு) (வெள்ளை பல வர்ணங்களில்)
GRAPE PAPER (பச்சை, சிவப்புடன், 10 வர்ணங்களில்)
பிறவுண் பேப்பர் — டைப்பிங் பேப்பர்
கடித உறைகள் (பல அளவுகளில்)
பிளாஸ்டிக் குரோசரி பேக்ஸ் & (WEDDING BAG)
Australian Clipsal Switches
அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட
கிளிப்சல் சுவிச்சுக்கள், சகலவிதமான லகேஜ்,
வெடிங் பைகள்
மின்சார அலங்காரப் பொருட்கள், மின்விசிறிகள்,
மின் அலங்காரப் பென்டன்கள், இஸ்திரிப் பெட்டிகள்
டோர்ச் லைட்டுகள், பொக்கட் றேடியோக்கள்
கசெட் றேடியோக்கள்
இன்னும் பல பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றிட
அம்பலவாணர் அன் சன்ஸ்
தேசிய கடதாசிக் கூட்டுஸ்தாபனத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள்- மின்சார இணைப்பு
ஒப்பந்தக்காரரும், விற்பனையாளரும்
196 கே. கே. எஸ். வீதி,
(கடைத்தெரு பிள்ளையார் கோயில் எதிரில்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8291 தந்தி: 'வாணர்சன்ஸ்'
தலைமையகம்:
பேர்ள் லைட்ஸ்
அம்பலவாணர் அன் சன்ஸ்
78, மலிபன் வீதி, கொழும்பு-11 போன்: 24321-28244
லெட்சுமி பவான்
97, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11

சிறந்த படங்களைத் திரையிட்ட
வின்ஸர்
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர்
வண்ணத் திரைக் காவியம்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்கணேஷ் ★ காமினி ★ ஸ்ரீபிரியா
★ ராதாசலூஜா ★ M. N. நம்பியார் ★ தேங்காய்
நடித்த
நீலக்கடலின் ஓரத்திலே
[ஈஸ்மன்ட் கலர்]
டைரக்ஷன்: கே சங்கர் இசை: எம் எஸ். விஸ்வநாதன்
தாகத்துக்கு தண்ணி குடிச்சேன், பாவத்துக்குத் தண்ணி அடிச்சேன்
இப்பாடலை இத்திரையில் கேட்டு மகிழுங்கள்.

எம்மிடம்
வெளி நாட்டில் இருந்து
இறக்குமதியான
வெல்டிங் றொட்
தேவையான அளவு பெற்றுக்
கொள்ளலாம்.

விபரங்கட்கு:
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்;
தொலைபேசி; 508

## யார் இந்த இளைஞன்?

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை ரயில் கடவைக்கருகில் மயக்க நிலையில் கிடந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் அங்கு மரணமானார். இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக இப்பொழுது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறுந்தேதி காலை 8-15 மணியளவில் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் மயக்க நிலையில் அனுமதிக்க பட்ட இவர் பின்னர் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு உடனடியாக மாற்றப்பட்டார். அங்கு வாக்குமூலம் கொடுக்காமலே அவர் மரணமானதாகத் தெரிகின்றது. சுமார் 25 அல்லது 26 வயது மதிக்கத்தக்க கறுத்த நிறமுடைய இவர் நீளமான தலைமயிரை பின்புறமாக மேவி இழுத்துள்ளார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

யாழ். நகரில்
கொழும்பு விலைகளுக்கமைய
இரும்புக்கம்பிகள்,
3/8, 5/8, 1/2''
கூரைத்தகடுகள், நீர்இறைக்கும்
மோட்டர்கள்
பெறுவதற்கு நாடுங்கள்
நேரடி இறக்குமதியாளர்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1-2 மொம்சாக் பில்டிங்
ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்

## பொலிகண்டி முகமூடிக் கொள்ளை:
# சந்தேகநபரை குடும்பத்தவர் சந்திக்க நீதிபதி அனுமதி

[புலோலி]

பொலிகண்டி முகமூடிக் கொள்ளை முயற்சிச் சம்பவச் சந்தேக நபரான சிவபாதசுந்தரத்தைக் குடும்பத்தவர்கள் கிராமசேவை அலுவலரின் அத்தாட்சிப்பத்திரத்துடன் சிறைச்சாலை அதிகாரிகள், பொலிஸ் அதிபர் சமூகத்தில் சந்திப்பதற்கு அனுமதியளிக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டார்.

இக் கொள்ளை முயற்சி சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிவபாதசுந்தரத்தை அவரது குடும்ப அங்கத்தவர்கள் சிறைச்சாலையில் சந்திப்பதற்கு அனுமதியளிக்க வேண்டுமென சட்டத்தரணி செல்வி விஜராணி மகாதேவா பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விண்ணப்பம் ஒன்றைச் செய்திருந்தார்.

சந்தேக நபரை, குடும்ப அங்கத்தவர்கள் கிராமசேவை அலுவலரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் சிறைச்சாலை உத்தியோகத்தர், பொலிஸ் அதிபர் சமூகத்தில் ஒரு கிழமைக்கு ஒரு தடவை சந்திக்கலாமென்றும், சந்தேக நபரின் சட்டத்தரணிகள் சந்தேகநபரைச் சந்திக்க அனுமதியளிக்குமாறும் நீதவான் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். [க]

### மட்டக்களப்பில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டனர். அகதிகளாக முகாம்களில் தங்கியுள்ள மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினர்.

### மாணவனின் சடலம்

மட்டக்களப்பு வாவிக்கருகில் இறந்து கிடக்கக் காணப்பட்ட மாணவர் பென்ஜமின் சுதர்ஸன் சடலம் மட்டக்களப்பு கல்வியங்காடு சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது.

இவ்விளைஞருடன் தொடர்புடையவர்கள் எனக் கைது செய்யப்பட்டிருந்த 4 இளைஞர்களையும் பொலீசார் விசாரணையின் பின் விடுதலை செய்துள்ளனர்.

### இனந்தெரியாத சடலம்

மட்டக்களப்புநாவலடி என்ற இடத்தில் இனந்தெரியாத வயோதிபர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பிரேதப் பரிசோதனைகளை மட்டக்களப்பு சட்டவைத்திய அதிகாரி டாக்டர் பஞ்சலிங்கம் நடத்தினார். நீரில் மூழ்கியதால் இம்மரணம் சம்பவித்துள்ளதாக அவர் கருத்து தெரிவித்துள்ளார். மரண விசாரணை அதிகாரி திரு. சிவநாதன் விடுத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். மரணமானவருக்கு சுமார் 75 அல்லது 80 வயதிருக்கும்.

## வரணி கொலை வழக்கு
# 'மகன் விழுந்து கிடந்தார் எதிரி ஓடிவிட்டார்'
### கதிர்காமு சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"நான் போனபோது மகன் விழுந்துகிடந்தார் எதிரி கையில் கொட்டன் போல் ஒன்றை வைத்திருந்தார். எதிரி என்னைக்கண்டுவிட்டு ஓடிவிட்டார்.

வரணி கொலை வழக்கில் சாட்சியமளித்த முரசுமோட்டையைச்சேர்ந்த கந்தர் கதிர்காமு மேற்கண்டவாறு கூறினார்

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கில் 78 மே 6-ம் திகதி வரணி தாவளை இயற்றாலையில் கதிர்காமு குலசிங்கத்தை கொலை செய்ததாக பொன்னையா தம்பையா மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர் சிறிசிவாயா, சட்டத்தரணி செல்வி நளினி நவரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார் அரசதரப்பில் சட்டத்தரணி ஜ. ஞானதாசன் ஆஜரானார்

க. கதிர்காமு சாட்சியமளிக்கையில் கூறியதாவது "எதிரியை எனக்குத் தெரியும் அவர் என் மூத்தமகனின் மகளை திருமணம் செய்தார் எதிரி காணி ஒன்று எழுதித்தரும்படி குலசிங்கத்தை கேட்டதாக சொன்னார் நானும் எழுதிக்கொடுக்கும்படி சொன்னேன். குலசிங்கம் சொன்னார் அவனுக்கு எழுதிக் கொடுத்தால் அவள் என்ன செய்வது என்று அவளுக்கும் எழுதிக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். நான் ஒன்றும் பேசவில்லை."

",சம்பவ தினம் நான் குலசிங்கம் வீட்டில் படுத்திருந்தேன் சத்தம் கேட்டு எழும்பிப்போனேன். நடந்தது ஒன்றும் தெரியாது 'ஐயோ' என்று சத்தம் கேட்டது. அது என் மகனின் குரல்.

,நான் போன போது அங்கு இரண்டுபேர் நின்றார்கள். அவர்கள்பின் ஓடிவிட்டார்கள். அவர்கள் இவர் என்று தெரியவில்லை.

",என்மகன் கதைக்க முடியாத நிலையிலிருந்தார். நான் குளறினேன். சத்தம் கேட்டு ஒரு சிறுவன் வந்தான். குலசிங்கத்தை தூக்கிவளவிற்குள் விட்டுவிட்டு என் மற்றொரு மகனிடம் சென்றேன், சம்பவம் நடந்த இடத்தில் நான் மட்டும் இருந்தேன்.''

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. [கு]

### விஜயவீர---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சந்தை மைதானத்தில் நடைபெறும் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்.

இன்று காலை யாழ்ப்பாணத்திற்கு வரும் திரு விஜயவீரா விற்கு பத்து இடங்களில் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

கிளிநொச்சி, முருகண்டி, பரந்தன், பளை, கொடிகாமம், சுன்னாகம் ஆகிய இடங்களில் வரவேற்பு அளிக்கப்படும்.

மக்கள் விடுதலை முன்னணி வடபிரதேச காரியாலயத்தில் திரு. விஜயவீர க சிறுப்பினர்களை சந்திப்பார். [மா]

### பிரிவினை---

[1-ம் பக்கத் தொடர்ச்சி

அமுல்படுத்தப் போவதாகவும், இதைமீறும் பட்சத்தில், ஆயுள் தண்டனை வழங்கப்படும் எனக் கூறப்படுகிறது. அச் சட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி பலமாக எதிர்க்கும்.

தமிழ் மக்களுக்கு பிரச்னைகள் உண்டு, இதற்குத் தீர்வு காண வேண்டியவர்கள் இனவாதத்தை பேசி வருகின்றனர். யூ. என் பி. அரசில் மக்கள் நம்பிக்கை இழந்து கொண்டு போகின்றனர். அதனாலேயே அவர்கள் அப்படி நடக்கின்றனர்.

நாடுபூராவும்- சிங்கள மக்கள் மத்தியிலும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தி கூட்டங்கள் நடத்தி வருகிறது. இதனால் பிரிவினை தடைச் சட்ட மூலத்தைப் பாவித்த மக்கள் விடுதலை முன்னணியையும், தடைசெய்வதோடு இனவாதத்தின் மூலம் ஆட்சிநடத்தலாம் ஆனால் நாம் எந்தச்சட்டத்தையும், இனவாதத்தையும்கடைசிவரை எதிர்ப்போம்.

#### தனி ஆட்சி அமைக்க உரிமையுண்டு

தமிழ் மக்களுக்கு தனிஆட்சி அமைக்கும் உரிமையுண்டு என்பதை மக்கள் விடுதலை முன்னணி தெளிவாகக் கூறியுள்ளது. ஆனால் இன்று இதற்கான உறுதியான தலைமையை மக்கள் விடுதலை முன்னணியால் தான் கொடுக்கமுடியும்.

### உருவப்பட திரைநீக்கம்

[யாழ்ப்பாணம்]

முன்னாள் கோப்பாய் கிராம சபை உபதலைவர் அமரர் ஆறுமுகம் தம்புவின் உருவப்படம் இன்று கோப்பாய் வெள்ளெருவைப்பிள்ளையார் சனசமூக நிலையமண்டபத்தில் திறந்து வைக்கப்படும்.

வெள்ளெருவைப்பிள்ளையார் சனசமூக நிலையம் கூட்டுறவுச் சங்கம், பாலர் பாடசாலை ஆகியவற்றின் ஸ்தாபகரான அமரர் தம்புவின் சேவையைப் பாராட்டி நடைபெறும் இவ் உருவப்படத் திறப்புவிழாவில்யாழ் மாவட்ட சபை உறுப்பினர்கள் திரு. கே. சின்னத்துரை, டாக்டர் நடராஜா உட்பட பல பிரமுகர்கள் உரையாற்றுவார்கள்.

கோப்பாய் எம். பி. திரு எம். ஆலாலசுந்தரம் அமரரின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைப்பார். (இ

## கல்வி வளர்ச்சியில் மன்னார் ஆயரின் அக்கறை

[மன்னார்]

"உங்களது கல்விவளர்ச்சியில் எனக்கு நிறைய அக்கறை உண்டு. நான் ஆயராக இருந்து கொண்டே இப்பாடசாலைக்கு தேவையான ஆக்கவேலைகளில் ஈடுபடுவேன்''.

மன்னார் புனிதசவேரிய பெண்கள் கல்லூரியில் நடந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கிய மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அதிபர் அருட் செல்வி தியோபின் தலைமையில் நடந்த விழாவில் ஆயர் பேரருட் திரு. தோமஸ்சௌந்தரநாயகம் மேலும் கூறியதாவது:- பாடசாலைகளுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. மறைக்கல்வி அறிவைப்பரப்பி வந்ததால் பாடசாலைகளோடு நான் நிறைய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டேன்.

மன்னார் மாவட்டத்தில் இப் பாடசாலை சிறந்து விளங்குகிறது இப்பாடசாலை சகல துறைகளிலும் விருத்தியடைந்து வருகிறது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு, கட்டடங்கள் தளபாடங்கள் மட்டும் இருந்தால் போதாது சிறந்த ஆசிரியர்கள் இல்லாமல் எக்கல்லூரியும் வளர்ச்சியடையாது. இன்று ஆசிரியர் பற்றாக்குறை சகல பாடசாலைகளிலும் உண்டு. இப் பாடசாலையில் 40 சிறந்தஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள் அதனால் இப் பாடசாலை முன்னேற்றம் அடைந்துள்ளது. [க]

### தேடப்பட்ட...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் கிடைக்கலாமென எதிர் பார்க்கப்படுகிறது.

இவரைத் தொடர்ந்து மேலும் பலர் கைது செய்யப்படலாமெனவும் தெரிகிறது

இச்சம்பவம் நடந்ததினம் சந்தேகநபர் தங்கியிருந்த வீட்டுவளவின் வேலிகள, எரிக்கப்பட்டும், பிடுங்கப்பட்டுமிருந்ததாகக் கூறப்படுகிறது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைஉறுப்பினர் டாக்டர் நடராசா, சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டார். இச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதி மக்களிடையே பலத்த பீதி ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு படையினர் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். [மா]

## வல்வையில் முப்படை சோதனை!

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறையில் நேற்று முன் தினம் மாலை, குறிப்பிட்ட ஒரு பகுதியில் ஒரே நேரத்தில் பல வீடுகள் பாதுகாப்புபடையினரால் சோதனையிடப்பட்டதாக தெரியவருகிறது.

இச்சோதனை நடைபெற்ற சமயம் கடற்படையினரும், விமானப்படையினரும், தரைப்படையினரும் இணைந்து பணியாற்றினார்கள் என்று கூறப்படுகிறது. [க]

## கேள்விப் பத்திரம்

2000 [இரண்டாயிரம்] வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகிறது. ரூபா 2-50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில பொது முகாமையாளர், ப நோ கூ. சங்கம், ஊர்காவற்றுறை என்னும் விலாசத்திற்குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப் பத்திரங்கள் 14-8-81 ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 14-8-81ந் திகதி 12-00 மணி வரை சங்கத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்பகாரர் ரூபா 750/- வைப்புப் பணம் செலுத்தி இருத்தல் வேண்டும்.

பதில்
பொதுமுகாமையாளர்,
ஊர்காவற்றுறை.
7-8-81 0573

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை, வீதி, 63ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஹூம் ஆகஸ்ட் 9ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q B 100236/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி; 7707, 389, 8126.